**தி/தி/புனித மரியாள் கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**மூன்றாம் தவணைப் பரீட்சை– 2022**
**கத்தோலிக்க திருமறை**

**தரம் - 07** **நேரம் - 1 ½ மணி**
**சுட்டெண் - ………………**

## பகுதி – I

**மிகச் சரியான விடையின் கீழ் கீறிடுக.**

1. பிறர் உடமையில் பேராசை கொள்ளாமல் இருப்பது பற்றிக் குறிப்பிடும் திருச்சபையின் நூல் எது?
   i. கத்தோலிக்க திருச்சபை ஏடு ii. பெரிய குறிப்பிடம்
   iii. திருவிவிலியம் iv. மறைக்கல்வி நூல்

2. நாம் இன்று பயன்படுத்துகின்ற செபமாலைப் பக்தி முயற்சியானது முதன் முதலாக யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
   i. திருத்தந்தை 13ம் கிரகரி ii. புனித டொமினிக்
   iii. திருத்தந்தை 11ம் கிளமெண்ட் iv. திருத்தந்தை 5ம் பயஸ்

3. புனித பவுல் எவ் இனத்தவருக்கு பொய் பேசுவதை விட்டு விட்டு உண்மை பேச வேண்டும் எனக் கற்பிக்கின்றார்?
   i. எபேசியருக்கு ii. தெசலோனிக்கருக்கு iii. பிலிப்பியருக்கு iv. உரோமையருக்கு

4. பின்வருனவற்றுள் ஏழாம் கட்டளைக்கு எதிரான செயலாக அமைவது
   i. பிறர் சொத்துக்களை அபகரிப்பது. ii. பொய்ச்சாட்சி சொல்வது
   iii. பிறர் மனைவியைக் கவர்வது iv. கொலை செய்வது

5. “அன்னை மரியாவோடு உறவு கொள்ள செபமாலையைத் தவிர சிறந்த வழி ஏதுமில்லை எனக் கூறியவர்
   i. திருத்தந்தை 2ம் ஜோன் பவுல் ii. திருத்தந்தை 11ம் கிளமெண்ட்
   iii. திருத்தந்தை 1ம் பிரான்சிஸ் iv. திருத்தந்தை 5ம் பயஸ்

6. திருச்சபையின் கட்டளைகளில் ஒப்புரவு பற்றிக் கூறப்பட்டுள்ள விடயம்
   i. பாஸ்கா காலத்தில் ஒப்புரவு பெறுதல் ii. திருப்பலியில் மன்னிப்புப் பெற ஒப்புரவாதல்
   iii. வருடத்தில் ஒருமுறையாவது ஒப்புரவு பெறுதல் iv. ஒப்புரவாகும் முன் மனம் வருந்தல்.

7. ஆண்டவர் ஆபிரகாமுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் வெளியடையாளமாக அமைவது
   i. விருத்தசேதனம் ii. வானவில் iii. பெருந்துன்பங்கள் iv. செம்மறி ஆடு

8. இயேசு கெத்சமெனித் தோட்டத்தில் அனுபவித்த துன்பங்களை நினைவூட்டுவதற்காக திருச்சபையால் நிறைவேற்றப்படுகின்ற பக்தி முயற்சி
   i. செபமாலை ii. சிலுவைப் பாதை iii. திருமணித்தியாலம் iv. நவநாட்கள்

9. தமது திருமண வாழ்வையே இறைவாக்குப் பணியாகக் கொண்ட இறைவாக்கினர்
   i. மீக்கா ii. யோனா iii. ஓசேயா iv. ஆமோஸ்

10. “ஆபிரகாம்” என்னும் பெயரின் பொருள்
   i. மேன்மையான தந்தை ii. இனங்களின் தந்தை
   iii. நாடுகளின் தந்தை iv. ஊர்களின் தந்தை

(10x2= 20 புள்ளிகள்)

**(II) இணைக்குக.**

| | |
|---|---|
| 1. இறை பராமரிப்பு | திருமுழுக்கு |
| 2. திரு யாத்திரை | எலியா |
| 3. பெரிய இறைவாக்கினர் | பெத்தேல் |
| 4. கிறிஸ்மா தைலம் | மடுமாதா திருத்தலம் |
| 5. ஆண்டவரின் இல்லம் | எசாயா |

(5x1= 5 புள்ளிகள்)

**(III) சரியாயின் (√ ) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. திருமுழுக்கின் மூலம் நாம் மூவித பணிகளுக்கு அழைக்கப்படுகின்றோம். (………….)
2. பங்கிலுள்ள பக்திச் சபைகளில் நாம் பணியாற்றத் தேவையில்லை. (……….)
3. திருக்குடும்பம் கிறிஸ்தவ குடும்பங்களின் முன்மாதிரிகையாகும். (………….)
4. நாம் தினமும் செபமாலை செபிப்பதன் மூலம் தீமையிலிருந்து பாதுகாக்கப்படுகின்றோம்.(…………..)
5. திருத்தெண்டர்களினால் திருப்பலியை நிறைவேற்ற முடியும். (………….)

(5x1= 5 புள்ளிகள்)

**(IV) பொருத்தமான சொல்லை இட்டு இடைவெளியை நிரப்புக.**

1. திருவிவிலியத்தின் இரண்டாவது நூல்……………………………….. ஆகும்.
2. இறைவனுடன் அன்பால் இணைந்து நல்லுறவுடன் உரையாடுவது……………….. ஆகும்.
3. “அருள் மிகப் பெற்றவரே வாழ்க! ……………………. உம்மோடு இருக்கின்றார்.
4. குலமுதுவர் யாக்கோபு தான் கனவு கண்ட இடத்திற்கு…………………. எனப் பெயரிட்டார்.
5. “கடவுள் இணைத்ததை மனிதன் …………………………

(5x2= 10 புள்ளிகள்)

## பகுதி – II

**(I) சுருக்கமான விடை எழுதுக.**

1. திருச்சபைக்குப் பொய்ச்சான்று கூறி உடனடியாக மரணித்த இருவரைக் குறிப்பிடுக.
2. ஏழாம் கட்டளை குறிப்பிடுவதன் படி நாம் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய முறைகள் இரண்டு எழுதுக.
3. பத்தாம் கட்டளையின் படி வாழ்வதற்கு எம்மால் செய்யக்கூடிய செயல்கள் இரண்டு எழுதுக.
4. செபமாலைப் பக்தியின் போது மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளைத் தியானிக்கும் தினங்களைக் குறிப்பிடுக.
5. “திருப்புகழ்மாலை” செப வழிபாட்டின் போது பயன்படுத்தப்படுகின்ற இரு புகழ்ச்சிப் பாக்களைப் பெயரிடுக.
6. அருட்பணியாளர்கள் மட்டில் உமக்குள்ள கடமைகள் இரண்டு எழுதுக.
7. உமது பெற்றோர் மட்டில் உமக்குள்ள கடமைகள் இரண்டு எழுதுக.
8. உண்மை நிறைந்த ஓர் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு உம்மால் செய்யக்கூடிய செயல்கள் இரண்டு எழுதுக.

(8x5= 40 புள்ளிகள்)

**(II) பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் இரண்டைத் தெரிவு செய்து சிறுகுறிப்பு எழுதுக.**

1. பத்தாம் கட்டளை
2. பொதுக் குருத்துவத்தின் பொறுப்புக்கள்
3. குலமுதுவர் ஆபிரகாம்
4. நற்கருணைப் பிரசன்னம்.

(2x10= 20 புள்ளிகள்)